# மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினையும் சிறுகதையாக்கமும்

எம்.எம்.ஜெயசீலன்

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

jseelanuop@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் குடியேற்றவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினராகிய இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் நாடு சுதந்திரமடைவதற்கு சற்று முன்னரும் பின்னரும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக நில அபிவிருத்திச் சட்டம் (1935), பிரஜாவுரிமைச் சட்டம் (1948), இந்திய பாகிஸ்தானிய வதிவிடச் (பிரஜாவுரிமை) சட்டம் (1949), சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறீமா-இந்திரா ஒப்பந்தம் (1974) நாடற்றோர் சட்டம் (1986) போன்ற பல சட்ட ஆக்கங்கள் மற்றும் ஒப்பந்தங்களால் அச்சமூகத்தினர் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுவந்ததை வரலாறு நெடுகிலும் காணலாம். இச்செயற்பாடுகளால் மலையகத் தமிழர் அடைந்த துயர், அது அவர்களது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள், அதனால் விளைந்த மனித அவலங்கள் போன்றவற்றை மையமாகக் கொண்டு மலையகத்தைச் சார்ந்தோரும் மலையகத்தைச் சாராதோரும் பல்வேறுவிதமான படைப்பாக்கங்களை மேற்கொண்டுள்ளனர். இப்படைப்பாக்கங்களுள்ளே சிறுகதைகள் பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளால் விளைந்த தனி மனித, குடும்ப அவலங்களைச் சித்திரிப்பதன் மூலம் அச்சமூக அவலங்களை எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இவ்வாய்வானது விவரண மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளின் வழி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கதைகளில் விரியும் காட்சிகள் யாவும் இந்தியவம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு மிகவும் நெருக்கமானவையாகும். அக்குழுமத்தின் ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் எதிர்கொணட் அனுபவங்களே இக்கதைகளின் கருக்களாக அமைந்துள்ளன. குறிப்பாக பன்முகப்பட்ட அக வெளிகளைக் கொண்டுள்ள தனிமனிதர்களின் வாழ்க்கையில் பிரஜாஉரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகள் ஏற்படுத்திய அவலங்களையும் அதிர்வுகளையும் பதிவுசெய்வதன் மூலம் ஒட்டுமொத்த இந்தியவம்சாவளி மலையகத் தமிழரினது அக மற்றும் புற வெளியில் நிகழ்ந்த அவலங்களையும் அதிர்வுகளையும் இக்கதைகள் சிறப்பாகப் பதிவு செய்து ள்ளன.

**திறவுச் சொற்கள்** - மலையகம், மலையகத்தமிழர், பிரஜாவுரிமை, பெருந்தோட்டத் தொழில்துறை.